**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.201/2014**
**Deposition of witness for prosecution -PW-4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கணேசலிங்கம் |
| Father Name | : | திரு. சோனை |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | உதவி வன பாதுகாவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 26th day of November 2021.

முதல் விசாரணை :-

நான் தற்போது இராமநாதபுரம் வன உயிரின கோட்டத்தில் உதவி வன பாதுகாவலர் ஆக பணியாற்றி வருகிறேன். சம்பவம் நடந்த 23.10.2013 ஆம் வருடம் நான் இராமநாதபுரம் வன சரகத்தில் வன சரகராக பணியிலிருந்த போது தேவிப்பட்டிணம் காவல்நிலைய ஆய்வாளர்கள் அடங்கிய குழுவினர் இரவு 10.30 மணிக்கு பத்தனேந்தல் விளக்கு ரோட்டு பகுதியில் ரோந்து பணி செய்தபோது அவ்வழியே வந்த இரு சக்கர வாகனத்தை தணிக்கை செய்துள்ளனர். அந்த தணிக்கையின் போது அரசால் தடை செய்யப்பட்ட கடல் குதிரைகள், கடல் சங்குநாகனம், ஆகியவை இருந்ததை கண்டு விசாரித்து அவர்கள் ஆஜர் எதிரிகள் ஆவர்கள். ,மேலும் இச்சம்பவம் வனதுறைக்கு சம்பந்தப்பட்டது என்பதால் எனக்கு தகவல் அளித்ததன் பேரில் 24.10.2013 காலை 10.50 மணியளவில் எதிரிகளையும், பிடிபொருட்களையும், அத்தாட்சி , மகஜர் உடன் என்னிடம் ஒப்படைத்தனர். நான் எதிரிகளிடம் தனி தனியே விசாரணை செய்து 11.30 மணியளவில் முதல் வாக்குமூலம் பெற்றேன்.இந்த வாக்குமூலம் பிரிவு வனவர் சோனை அவர்களால் எடுக்கப்பட்டு என் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த வாக்குமூலம் அ.த.சா. 3, 4, 5 ஆகும். வாக்குமூலத்தில் எதிரிகள் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு தமக்கு குறைந்தபட்ச தண்டனை வேண்டுமாறு கேட்டுக் கொண்டார். பிடிபொருட்களை மூக்கையா வனக் காப்பாளரின் H நமூனா 0019307 நாள் 24.10.2013 ல் கீழ் கொண்டுவரப்பட்டது. எனவே நான் 24.10.2013 ல் எதிரிகள் அனைவரையும் காவல் அடைப்பு செய்ய நடவடிக்கையும் பிடிபொருட்களான கடல் குதிரை 350 கிராம். கடல் சங்கு நாகனம் 1.7 கி.கி மற்றும் இரு சக்கர வாகனம் ஸ்டார் சிட்டி TN 65 M 2094 ஆகியவற்றை படிவம் 95 ன் கீழ் கொண்டுவந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன்.அந்த படிவம் அ.த.சா. 6 ஆகும். அவ்வாறு படிவம் 95 ன் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்ற உத்தரவுபடி நீதிமன்ற வளாகத்தில் கொட்டி அழிக்கப்பட்டுது. அவ்வாறு கொட்டி அழித்ததற்கு உண்டான சிடி சா.பொ.1 ஆகும்.சிடி இரண்டாக உடைந்துள்ளது. மேலும் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவு படி

09.12.2013 ல் எதிரிகள் வசம் என்னால் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வாகனத்தின் போட்டோக்கள் சா.பொ.2 ( எண்ணிக்கை 4 ) ஆகும். எனவே ஆவணங்களின் அடிப்படையிலும் என் விசாரணையின் அடிப்படையிலும் குற்றமானது வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 மற்றும் திருத்தியமைக்கப்பட்ட வன உயிரின சட்டம் 2002 பிரிவு 9, 39, 50, 51 ன் கீழ் வருவதும் கடல் குதிரை அட்டவணை 1 பகுதி 2 A ன் கீழ் வரும் வன உயிரின குற்றமாகும் என்பதால் அ படிவம் தயார் செய்து 24.07.2014 ல் மேல் நடவடிக்கைகாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.